**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.120/2019

பெயர்–திரு.மாணிக்கம் நாள்.13.03.2026

வா.சா.5 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.5 : 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் கவுன்சிலராக இருந்து எனது பதவி காலம் முடிந்து தற்போது எனது மனைவி கவுன்சிலராக இருக்கிறார். பேரூராட்சியில் சொத்து சம்மந்தமாக பிரச்சினை இருந்தால் கவுன்சிலர் முன்னிலையில் அளக்கப்பட வேண்டுமா என்றால் இல்லை. வாதி, பிரதிவாதிகள் என்னை நேரிலோ மனு மூலமாகவே தாவா சொத்து அளப்பதற்காக அழைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு என் தனி விருப்பத்தின் பேரில் சென்றுள்ளேனா என்றால் சரிதான். இதேபோல் வேறு வழக்குகளுக்கு சொத்துக்களை அளந்து பார்க்கும்போது நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தை பார்வையிட செல்லும் முன் வாதி பிரதிவாதிகளின் ஆவணங்களின் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று பார்த்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெகதீசன் மற்றும் சரவணனின் வீட்டிற்கு இடையில் 31/2 அடி சந்து பத்திரத்தில் உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஜெகதீசன் வீட்டிற்கு கிழக்கு, சரவணின் வீட்டிற்கு மேற்கு உள்ளது என்று சரவணின் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது சரவணனுக்கு தான் சொந்தம். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்தை அளவீடு செய்யும் போது நான் அங்கு இருந்தேன். அவ்வாறு அளவீடு செய்யும் போது சரவணன் 2 1/2 அடி சந்தை ஆக்கிரமித்துள்ளதாக எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரிதான். சர்வேயர் அளந்து 1 அடி சரவணனுக்கும் ஜெகதீசனுக்கு 2 1/2 அடியும் உள்ளது என சர்வேயர் சொன்னார். வாதி என்னுடன் வந்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வாதிக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி அது தள்ளுபடியானது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்து தள்ளுபடியானது எனக்கு தெரியாது. அதை எதிர்த்து வாதி தாக்கல் செய்த மேல்முறையீடு பற்றி எனக்கு தெரியாது. வருவாய்துறை ஆவணங்களில் வாதிக்கு 4 செண்ட் பூமி மட்டுமே பாத்தியம் என ஆவணங்கள் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியாது,. மேற்படி 3 1/2 அடி சந்தில் வாதி காம்பவுண்ட் சுவர் கட்டும்போது 1ம் பிரதிவாதி தடை செய்த விபரம் எனக்கு தெரியும். நான் தாவா சொத்திற்கு தென்புறத்தில் குடியிருப்பதற்கும், நான் கவுன்சிலர் என்பதற்கு ஆதரவாக ஏதாவது ஆவணம் கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவரவில்லை.

மேற்குறிப்பிட்ட சந்து பொது சந்து என குறிப்பிட்டுள்ளது என பிரமாணபத்திரிக்கையில் உள்ளது என்றால் சரிதான். சந்து பொது சந்து தான்

என சர்வேயர் அளந்து வாதிக்கு அறிக்கை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சரவணனுக்கு 1 அடி சந்து தான் பாத்தியம் என சர்வேயர் அறிக்கை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2019ல் ஜெகதீசன் பாதுகாப்பு கருதி அஸ்திவாரம் தோண்டியது 3 1/2 அடி பொது சந்தில் தான் தோண்டினார். மேற்படி வழக்கில் வா.சா.3, 4 ஆக கிராம நிர்வாக அலுவலர் அரியப்பன்மபாளையம், சர்வேயர் தாவா சொத்தை அளந்ததால் தான் சரியான அளவீடுகளை கொடுக்க முடியும் என சாட்சியம் சொன்ன விபரம் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமான வாதி என்னிடம் பத்திரம் கொடுத்தாரா என்றால் இல்லை.

தாவா சொத்தில் உள்ள 3 1/2 அடி பொதுவானது என்பதை தெரிந்து கொண்டே வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2019ல் தாவா சொத்தை அளக்கும்போது நானோ எனது மனைவியோ கவுன்சிலராக இருந்தேமா என்றால் இல்லை. 2019ல் நான் கவுன்சிலராக இல்லாமல் வழக்கு பற்றி தெரியாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது ஆதரவின் அடிப்படையில் தான் வாதி பிரதிவாதிக்கு இடையூறு செய்கிறார் என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கூறப்பட்டுள்ளது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.13 13:30:03 +0530

District Munsif